முஸ்லிம் அல்லாதவர்கள்,
இஸ்லாம் குறித்த
ஐயங்களை
மனம் விட்டுப்பேச...




அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# அழைப்பொலி

ஓங்கி ஒலிக்கும் எட்டுத் திக்கும்...

இறைச்செய்தியை இலவசமாகத் தாங்கி வரும் முதல் இஸ்லாமிய மாத இதழ்

இன்பங்கள் பூத்துக் குலுங்கும் இந்த ஈகைத் திருநாளில் எல்லா முஸ்லிம்களின் வாழ்வில் நலமும் வளமும் நல்க 'அழைப்பொலி'யின் பிரார்த்தனைகள் 'தகப்பலல்லாஹு மின்னா வ மின்கும்'

تقبل الله منا ومنكم

அழைப்பு: 1 ஒலி: 2 | ஷவ்வால் 1438 | ஜூலை 2017 | தனிச்சுற்றுக்கு மட்டும்













(ரமளான் மாதம் நிறைவடைந்துவிடும். அத்தோடு நமது கடமைகள் நிறைவடைந்து விடுவதில்லை. இம்மாதத்தில் பெற்ற பயிற்சிகளை உயிர்ப்பிக்க, வரும் மாதங்கள் நம்முன் காத்திருக்கின்றன. நாள் முழுதும் உண்ணா நோன்பிருந்து பெற்ற பயிற்சிகளை செயல்படுத்தும் போதுதான் ரமளான் உயிர்பெறும்!)

## ரமளானுக்கு பின்...

- M. பஷீர் ஃபிர்தவ்ஸி



ஈகைத் திருநாள் சிறப்பிதழ்

அன்றாட வாழ்க்கையில் நாம் பல பயிற்சிகளை மேற்கொள்கிறோம். அதன் வாயிலாக பல்வேறு நன்மைகளைப் பெறுகின்றோம். கல்வியைப் பயில்கின்ற ஒரு மாணவன் தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவதற்காக முயற்சி எடுத்து, இரவு பகல் பாராமல் படிக்கிறான். இவ்வாறு பயிற்சி எடுக்கும் மானவன் தேர்வில் அவன் பெற்ற பயிற்சிக்கு செயல்வடிவம் கொடுக்காமல் போனால் அவன் மேற்கொண்ட பயிற்சி அனைத்தும் வீணாகி விடும்.

ஓர் இளைஞன் தனது உடலை வலுப்படுத்திக் கொள்வதற்கும், கட்டுடலாக்கிக் கொள்வதற்காகவும் உடற்பயிற்சி மேற்கொள்கிறான். சிறிது கால பயிற்சியின் மூலம் அழகான வலுவான உடலமைப்பைப் பெறுகின்றான். அதன் பின்னர், அதனை பராமரிக்க தவறிவிட்டால் அவரது உடல் வலுவிழந்து தொப்பையும் தொந்தியுமாக காட்சியளிப்பான்.

நாம் மேற்கொள்கின்ற பயிற்சிகளை தொடர்ந்து கடைப்பிடிக்கவிட்டால் அப்பயிற்சிகள் அனைத்தும் வீணாகிவிடும் என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். அப்படியிருக்கும்போது முஃமின்களின் வாழ்வில் மாற்றம் நிகழ்வதற்காக அல்லாஹ் வழங்கிய அற்புத ரமளானை நாம் வீணடிக்கலாமா?

### ரமளானில் நாம் பெற்ற பயிற்சிகள்!

#### 1. ஈமானிய பயிற்சி

தொழுகை, நோன்பு, திக்ர், துஆ, திலாவத்துல் குர்ஆன் போன்ற இபாதத்துகளை நம்பிக்கையுடன் ரமளான் மாதத்தில் நிறைவேற்றியிருக்கிறோம். அவ்வாறே வரும் மாதங்களிலும் முறையாக எல்லா வணக்க வழிபாடுகளிலும் முனைப்போடு செயல்பட வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைக்கும் நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டுதலுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதை இம்மாதத்தில் கற்றிருக்கிறோம். பயிற்சி எடுத்திருக்கிறோம்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

கல்விச் சேவையில் 9ஆம் ஆண்டை நோக்கி..!
PRESTON INTERNATIONAL COLLEGE Education and Beyond
பிரஸ்டன் பன்னாட்டுக் கல்லூரி
#10, K.B. தாசன் சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை - 18
Affiliated to
A Unit of PERF Professional Education and Research Foundation
சேர்க்கை நடைபெறுகிறது
B. A. இஸ்லாமியக் கல்வி - நேரடி/தொலைதூரக் கல்வி
M. A. இஸ்லாமியக் கல்வி - தொலைதூரக் கல்வி
ஆங்கிலம்/தமிழ் வழிக் கல்வி
தலை சிறந்த மார்க்க அறிஞர்களிடம் கல்வி பயில அரியதோர் வாய்ப்பு தவற விடாதீர்..!
சிறப்பம்சங்கள்
- மதீனா, உம்முல் குரா, மஃஹதுல் ஹரம், தாருல் ஹுதா - இலங்கை, ஜாமிஆ தாருஸ் ஸலாம் - உம்ராபாத் மற்றும் தமிழக முன்னனி கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு வரையறுக்கப்பட்ட இஸ்லாமியத் துணைப் பாடங்கள்.
- இஸ்லாமியச் சூழலில் கல்லூரி வளாகம்.
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர் படிப்பைத் தொடர்வதற்கு வாய்ப்பு.
- M.A. / M.B.A. போன்ற மேற்படிப்புகளைத் தொடர்வதற்கான வாய்ப்பு.
- படிப்பை நிறைவு செய்தபின் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் கல்வி மற்றும் நிர்வாகத் துறைகளில் வேலை வாய்ப்புக்கான வழிகாட்டல்.
- சகோதரிகளுக்கு இஸ்லாமியச் சூழலில் பாதுகாப்பான விடுதி வசதி.
- மிகச் சிறந்த நூல்களின் தொகுப்புகளைக் கொண்ட நூலகம்.
- கண்காணிப்பு கேமராக்களுடன் வடிவமைக்கப்பட்ட வகுப்பறை மற்றும் வளாகம்.
- தகுதியுடைய மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை.
FOR ENQUIRY
044-24353113/ 42111365
9941678784
info@prestonchennai.ac.in
www.prestonchennai.ac.in

அல் அஸ்லம் ஹஜ் & உம்ரா சர்வீஸ்
காரைக்கால் - நாகப்பட்டினம் - மயிலாடுதுறை - கும்பகோணம் - சென்னை
"ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்" - அல்குர்ஆன் 2:196
இஸ்லாமிய மக்களுக்கு "ஓர் நற்செய்தி"
புனித உம்ரா பயணம் - 14 நாட்கள்
2017 - 2018 நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதத்திற்கான உம்ரா
மக்கா & மதினா
தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக மீண்டும் மிகக்குறைந்த கட்டணத்தில்
₹44,900/-*
விசா, விமான கட்டணம், உணவு, தங்குமிடம், மக்கா - மதீனா - ஜியாரத், பஸ் போக்குவரத்து உட்பட...
இலவச தாயிஃப் பயணம்
இந்த அறிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம்.
உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்
பயண உலகின் சிறந்த நண்பன், விமான டிக்கெட் விற்பனையில் முன்னனி நிறுவனம்...
சஹாரா ஏர் டிராவல்ஸ்
விமான டிக்கெட் | பாஸ்போர்ட் | கார்கோ சர்வீஸ்
டூரிஸ்ட் விசா | பேக்கேஜ் டூர்
WESTERN UNION MONEY TRANSFER
9940755317 / 9944089405
எண்:9, மூன்று கிணற்று பிளாஸ் தெற்கு வீதி, காரைக்கால் - 609602
98843 74460 / 99416 74460



# முஸ்லிம் தனியார் சட்டம் சில
# திருமணம் • விவாக

- வி.எஸ். முஹம்மத் அமீன்

**முஸ்லிம் தனியார் சட்டங்கள் ஏன்? எதற்கு?**

இஸ்லாம் நிறைவான ஒரு மார்க்கம். வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் இஸ்லாம் துல்லியமான, செறிவான வழிகாட்டுதல்களை வழங்கியிருக்கிறது. அந்த வழிகாட்டும் பொறுப்பையும் இறைவனே ஏற்று வழிகாட்டியுள்ளான். இறைவனின் வழிகாட்டு தல்கள் பழுதற்றவை. படைத்ததோடு தம் பணி முடிந்தது என இறைவன் ஒதுங்கிக் கொள்ளவில்லை. படைத்தவனே சட்டங்களை இயற்றினான். அவன் மனித குலத்திற்கு அளித்த உன்னதமான வழிகாட்டு நெறிகள்தாம் ஷரீஅத் சட்டங்கள்.

இறைவன் வகுத்தளித்த ஷரீஅத் சட்டங்களின் ஒருபகுதிதான் இஸ்லாமிய குடும்பவியல் சட்டங்கள். பன்மைச் சமூகத்தில் இதனை முஸ்லிம் தனியார் சட்டம் என்று குறிப்பிடுகின்றோம். தனியார் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றுவதற்கான உறுதியை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கி யிருக்கிறது. முஸ்லிம் தனியார் சட்டங்கள் என்பது குடும்பவியல் சட்டங்களாகும். திருமணம், தலாக், குலா, வாரிசுரிமை, பலதாரமணம் ஆகியன முஸ்லிம் தனியர் சட்டங்களாகும். இறைவன் அருளிய இந்தச் சட்டங்களின் அடிப்படையில் தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்வது முஸ் லிம்கள் மீதான கடமையாகும்.

**நிராகரிப்பாளர்கள், அநீதியாளர்கள், பாவிகள்**

இறைச்சட்டங்கள் ஏட்டளவுச் சட்டங்கள் அல்ல. அவை நடைமுறைப் படுத்துவதற்காக அருளப்பட்ட சட்டங்கள். முஸ்லிம் குடும்பவியல் சட்டங்கள் நடைமுறைக்கு ஏற்றவை. நீதி மிக்கவை. இந்தச் சட்டங்கள் பிரச்னைகளுக்கு நீதியான தீர்வைத் தருபவை. மனிதனின் பலம், பலவீனங்கள், பிரச்னைகள், இயல்பு யாவற்றையும் மிகத் துல்லியமாக அறிந்த இறைவன் மனித இயல்பிற்கேற்ப வழங்கிய அறம் சார்ந்த சட்டங்கள்தாம் ஷரீஆ சட்டங்கள்.

இந்தச் சட்டங்கள் உலகில் எல்லாப் பகுதிக்கும் செல்லுபடியாகுபவை. எல்லாக் காலத்திற்கும் ஏற்றவை. மாற்றங்கள் தேவைப்படாத மாசற்ற சட்டங்களே ஷரீஆ சட்டங்கள். இறைவன் அருளிய சட்டங்களை நடைமுறைப்படுத்தி அமைதியான குடும்பத்தை உருவாக்க வேண்டும். அந்த அமைதியான இல்லங்கள் இணைந்து அமைதி தவழும் உலகை உருவாக்க வேண்டும்.

குடும்ப அமைதி சீர்குலையும்போது தனிமனித அமைதி குலைகிறது. அமைதி குலைந்த மனிதர்கள் பூமியில் குழப்பத்தை ஏற்படுத்தி உலகின் பேரமைதியைச் சிதைத்து விடுகின்றனர். ஷரீஆ சட்டங்கள் நீதியை அடிப்படையாகக் கொண்டவை. அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் போதுதான் நீதிமிக்க சமுதாயம் உருவாகும். இந்தச் சட்டங்களைப் புறக்கணித்தால் நீதிக்குப் பதில்

அநீதி மேலோங்கும். அநீதியால் உலகம் அழுக்காகிப் போகும். கலக பூமியாக உலகம் உருமாறிப் போகும்.

மனித இயல்புக்கேற்ற நீதி நிறைந்த இந்தச் சட்டங்களைப் பின்பற்றுவது முஸ்லிம்களின் கடமை. விரும்பியவர்கள் பின்பற் றலாம், விரும்பாதவர்கள் விட்டு விடலாம் என்ற அடிப்படையில் அல்லாமல் அனைவரும் கட்டாயம் பின்பற்றியே ஆகவேண்டிய சட்டங் கள்தாம் இஸ்லாமிய குடும்பவியல் சட்டங்கள். இந்த இறைச் சட்டங்களைப் புறக்கணிப்பவர்களைக் குறித்து நிராகரிப்பாளர்கள், அநீதியாளர்கள், பாவிகள் என இறைவன் கடுமையாக எச்சரிக் கின்றான். (பார்க்க: திருக்குர்ஆன் 5:44-47)

**தனியார் சட்ட பாதுகாப்பும், முஸ்லிம் சமுதாயமும்**

இஸ்லாமிய குடும்பவியல் சட்டங்கள் மீது யாராவது கைவைக்க நினைத்தால் முஸ்லிம் சமுதாயம் வெகுண்டு எழும். ஏனென்றால் அது வெறுமனே சட்டப் பிரச்னை அல்ல. மார்க்கப் பிரச்னை. இறைநம்பிக்கை தொடர்பான பிரச்னை.

**முஸ்லிம் தனியார் சட்டத்தில் நீதிமன்றமும், அரசும் தலையிடுவதை முஸ்லிம்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். இதற்காகவே முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் செயல்பட்டு வருகிறது. இது இறைவன் வழங்கிய கடமை. இந்திய அரசியலமைப்பு வழங்கிய உரிமை, இந்தக் கடமையையும், உரிமையையும் ஒருக்காலும் முஸ்லிம்கள் விட்டுத்தர மாட்டார்கள். எல்லாருக்குமான பொதுவான சிவில் சட்டங்கள் என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. அது முஸ் லிம்களுக்கு எதிரானது அல்ல. பன்மைச் சமூகத்திற்கு எதிரான சட்டம்தான் பொது சிவில் சட்டம்.**

**இஸ்லாமிய குடும்பவியல் சட்டங்களும், முஸ்லிம்களும்**

இஸ்லாமிய குடும்பவியல் சட்டங்களை தங்கள் உயிருக்கும் மேலாக இஸ்லாமிய சமுதாயம் மதிப்ப தாகக் கூறுகிறது. அதில் துளியளவு மாற்றத்தையும் அனுமதிக்க இஸ்லாமிய சமுதாயம் தயாராக இல்லை. இந்த முஸ்லிம் தனியார் சட்டங்கள்தான் எங்களுக்குத் தேவை என வீதியிலிறங்கி பெருங்குரல் எழுப்புகிறது. போராட்ட, ஆர்ப்பாட்டங்களில் ஆர்ப்பரிக்கிறது. மூன்றரைக் கோடிப் பேர் 'இந்த முஸ்லிம் தனியார் சட்டங்கள்தாம் எங்களுக்குத் தேவை' என கையொப்பமிட்டு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். ஆனால் இவை மட்டுமே தனியார் சட்டத்தைப் பாதுகாக்கப் போதுமானதா? என்னதான் சட்டங்கள் இருந்தாலும் அதை நடைமுறைப்படுத்தும்போதுதான் அந்தச் சட்டங்கள் உயிர் பெறுகிறது.

முஸ்லிம் தனியார் சட்டங்கள் எங்களுக்குத் தேவை என உறுதிபடக்கூறும் முஸ்லிம் சமுதாயத்தில் இஸ்லாமிய குடும்பவியல் சட்டங்கள் எந்தளவு நடைமுறையில் இருக்கின்றன என்பதை சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்க முஸ்லிம் சமுதாயம் முன்வர வேண்டும்.

**திருமணங்களில் இஸ்லாமிய குடும்பவியல் சட்டங்கள்**

இறைவனும், இறைத்தூதரும் காட்டித்தந்த ஷரீஆ எனும் சட்டத்தின் அடிப்படையில் திருமணத்திற்கான விதிகள் என்ன தெரியுமா? மணமகன், மணமகளின் சம்மதம் பெற வேண்டும், திருமணத்திற்கு சாட்சிகள் அவசியம், மணமகன், மணமகள் விரும்புகின்ற மஹர் எனும் மணக் கொடையை மனமுவந்து அளித்திட வேண்டும். பொறுப்பாளிகள் இருக்க வேண்டும். இவ்வளவுதான் இஸ்லாமிய குடும்பவியல் சட்டம் வகுத்துத் தந்த திருமணத்திற்கான விதிகள்.

இந்தச் சட்டம் தங்கள் உயிருக்கு மேலானது என்று சொல்லும் முஸ்லிம் சமுதாயம் இந்த வழிகாட்டுதலின் படிதானே திருமணங்களை நடத்த வேண்டும். என்னே முரண்! மணமக்களின் சம்மதம் ஒப்புக்கே பெறப்படுகின்றன. மஹர் எனும் மணக்கொடைக்குப் பதிலாக வரதட்சணை எனும் பெயரில் இஸ்லாமிய குடும்பவியல் சட்டத்திற்கு நேர் எதிரான கொள்ளை நடைபெறுகிறது. வலீமா என்ற பெயரில் டாம்பீகமான, ஆடம்பரமான விருந்து நடைபெற்று பெருமளவு வீண்விரயங்கள் நடைபெறுகின்றன. திருமணத்தில் மூட நம்பிக்கைக்கோ, சடங்கு சம்பிரதாயங்களுக்கோ இஸ்லாமிய குடும்பவியல் சட்டம் துளியும் இடமளிக்கவில்லை. ஆனால் முஸ்லிம் சமுதாயத் திருமணங்களில் மூட நம்பிக்கைகளும், சடங்கு சம்பிரதாயங்களும் நிரம்பிக் கிடக்கின்றன.

எந்தச் சட்டம் எங்களுக்கு வேண்டும் என்று குரலெழுப்புகின்றோமோ அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது யார்? எந்த ஷரீஆ சட்டங்கள் உயிருக்கும் மேலாக மதிக்கப் படுவதாகச் சொல்லப்படுகிறதோ... அந்தச் சட்டங்களுக்கு முரணாக நடப்பவர்கள் யார்?

**தலாக்கும், முஸ்லிம் சமுதாயமும்..**

இறைவன் வகுத்துத்தந்த இஸ்லாமிய குடும்ப வியல் சட்டம் தலாக்கை அனுமதித்துள்ளது. ஆனால் அது இறைவிருப்பத்தைப் பெறாத அனுமதி. இறைவன் கூறும் தலாக் சட்டம் மூன்று கால இடைவெளிகளில் நடைபெறுவதை விதியாக்கி யுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் உடையும் உள்ளங்களை இணைக்க வேண்டும் என இறைவன் அறிவுறுத்துகின்றான். தலாக் விஷயத்தில் இறைவனை அதிகம் அஞ்சிக் கொண்டு நீதமுடன் நடக்கும்படி வலியுறுத்துகின்றான். இறைவன் காட்டித்தந்த தலாக் முறையில் முதல் தலாக் சொன்னபிறகு தங்கள் தவறைச் சீர்தூக்கி, பிரச்னை களை அலசிப்பார்க்கும் கால அவகாசம் அளிக்கப் படுகிறது. அதற்குள் இணைந்து கொள்ளலாம். கால அவகாசம் தாண்டிவிட்டால் தலாக் நிகழ்ந்து விடுகிறது. இதுபோன்ற மூன்று தவணைகளை இறைவன் வழங்குகின்றான்.

இந்த முறைப்படி முஸ்லிம் சமுதாயத்தில் தலாக் நடைபெற்றாலும் கூட, இந்த வழிமுறைகளை

**வாசகர் கருத்து!**

அழைப்பொலியின் புதிய வரவைக் கண்டு நாங்கள் மகிழ்வடைகிறோம். இன்னும் தொடர்ந்து பல மார்க்கச் செய்திகளைத் தந்து சீர்திருத்தம் செய்யும் என எதிர்பார்க்கிறோம். அழைப்பொலிக்கும் அதன் குழுவுக்கும் வாழ்த்துகள்...

– அப்துல்லாஹ் மற்றும் குடும்பம்,
தேரடி, திருவொற்றியூர்.

**ONLINE FREE UNANI HERBAL CONSULTATION**

044-2848 1344 * Email: drsyedmmameen@gmail.com

for * Sinusitis * Joints Pain * Infertility
* Nervous Debility * Obesity * Beauty & Hair Care

in public interest by **Dr. Hakim Syed M.M.Ameen**
**S.K's Herbal Medical Hospital & Research Centre**
36, J.J.K. Road, Royapettah, Chennai - 600 014. India.

# புரிதல்களும், தெளிவுகளும்
# ரத்து ● வாரிசுரிமை



உடைத்து நொறுக்கும் தலாக்குகளும் நடைபெறு கின்றன. **உப்புப் பெறாத காரணத்திற்காக ஒரே மூச்சில் மூன்று முறை தலாக் என்று சொல்லிவிட்டு பிரிந்து விடுகின்ற முறை நடைமுறையில் உள்ளது. தபாலிலும், எஸ்.எம்.எஸ்ஸிலும், வாட்ஸ் அப்பிலும் தலாக் சொல்லிவிட்டுப் பிரிகின்ற அவசரத் தலாக்குகளும் அவ்வப்போது அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.**

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய 'குலா' எனும் மணவிலக்கு உரிமையை முஸ்லிம் சமுதாயம் கடினமாக்கி விட்டது.

இறைவன் வகுத்த ஷரீஆ சட்டங்களுக்காகக் குரல் கொடுக்கும் முஸ்லிம் சமுதாயத்தில்தான் இறைவன் வகுத்த விதிகளுக்கு முரணாக தலாக்குகள் நடைபெறுகின்றன.

**சொத்துப் பிரித்தலும், முஸ்லிம் சமுதாயமும்**

முஸ்லிம் தனியார் சட்டத்தின் மிக முக்கியமான கூறு வாரிசுரிமை. சொத்துகளை எப்படிப் பங்கிட வேண்டும்? யார் யாருக்கு வாரிசு? பெண்களுக்கான பங்கு என்ன? ஆண்களுக்கான பங்கு என்ன? யார் யாருக்கு எவ்வளவு வழங்க வேண்டும்? உயில் எழுதி வைக்கலாமா? தம் மனம்போன போக்கில் தன்னுடைய சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் எழுதி வைக்கலாமா? என்ற அனைத்துக் கேள்வி களுக்கும் இறைவன் காட்டித் தந்த வாரிசுரிமைச் சட்டத்தில் விளக்கங்களும், துல்லியமான வழிகாட்டுதல்களும் இருக்கின்றன.

இறைவன் வகுத்துத்தந்த பாகப்பிரிவினை முறையில், இறைத்தூதர் நபி(ஸல்) அவர்கள் வழிகாட்டிச் சென்ற முறையில்தான் இஸ்லாமிய சமூகத்தில் சொத்துப் பிரிப்பு நடைபெறுகின்றதா? என்றால் 'இல்லை' என்பதுதான் பதிலாக வந்து விழும்.

எந்தச் சட்டத்தின் அடிப்படையில் வாழ்வோம் என்று உறுதி மொழி அளித்துள்ளதோ அந்த அடிப்படையில்தான் முஸ்லிம் சமுதாயம் நடந்து கொள்கிறதா இல்லை.. ஊர் வழக்கப்படி, வட்டார வழக்கப்படி, முஹல்லா வழக்கப்படிதான் பஞ் சாயத்து முறையில் பாகப்பிரிவினைகள் நடைபெறு கின்றனவா? சொத்துப் பங்கீடு ஒருபுறம் இருக்கட்டும். இது குறித்த விவரங்களை எத்தனை விழுக்காடு முஸ்லிம்கள் புரிந்து வைத்துள்ளார்கள் என்பது இதயத்தை அழுத்தும் கனமான வினாவாகும்.

**காத்திருக்கும் செயற்களம்**

இஸ்லாம் உலகை அமைதிப்படுத்த வந்த மார்க்கம். இஸ்லாத்தைப் பின்பற்றுவதனால் மட்டுமே இந்த உலகிலும், மறு உலகிலும் மனிதன் வெற்றி பெறமுடியும். இஸ்லாம் நீதமிக்க, அமைதி நிறைந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப விரும்புகிறது. உலகம் இஸ்லாத்தின் நிழலில் இளைப்பாற விரும்புகிறது. இச்சூழலில் இஸ்லாத்தின் செயல் வடிவங்களாக முஸ்லிம்கள் திகழ வேண்டும்.

ஷரீஆ சட்டங்களை அச்சு அசலாக நடைமுறைப் படுத்த வேண்டும். இஸ்லாம் காட்டித்தந்த வாழ்வியல் முறைப்படியே நமது திருமணங்கள், விவாகரத்து, சொத்துரிமை போன்ற அனைத்து விவகாரங்களும் நடைபெற வேண்டும். சொற்களத் திலிருந்து முஸ்லிம் சமுதாயம் செயற்களத்திற்கு வரவேண்டும். நடைமுறை வாழ்வில் ஷரீஆ சட்டங்கள் உயிர்த்திருக்கும் காலமெல்லாம் இந்த உலகம் நீதியில் திளைத்திருக்கும், மகிழ்ச்சியில் முகிழ்த்திருக்கும்.

**முஸ்லிம் சமுதாயத்தின் பொறுப்புகள்**

* இஸ்லாமிய குடும்பவியல் சட்டங்கள் குறித்த முழுமையான புரிதலும், தெளிவும் வேண்டும். ஒவ்வொருவரும் இச்சட்டங்களை அறிந்தும் புரிந்தும் வைப்பது அவசியமாகும்.

* இஸ்லாமிய குடும்பவியல் சட்டங்களின் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பமும் தங்கள் வாழ்வியலை அமைத்துக் கொள்ள வேண்டும்.

* இஸ்லாமிய சமுதாயத்தில் நடைபெறும் திருமணங்களில் வரதட்சணை முழு முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

* திருமணங்கள் எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் எளிய முறையில் நடைபெற வேண்டும். ஆடம்பரத் திருமணங்களை இந்தச் சமுதாயம் ஊக்குவிக்கக் கூடாது.

*தலாக் விவகாரத்தில் நிதானமிழக்காமல், பிரச்னைகளை ஆய்ந்து இறைவனுக்கு அஞ்சி முறைப்படி கால இடைவெளிகளில் தலாக் நடைபெறுவதை ஒவ்வொரு மஹல்லாவும் கண்காணிக்க வேண்டும்.

* தலாக் என்றாலே 'முத்தலாக்' எனும் பிம்பம் நிழலாடுவதை மாற்றியமைத்து, ஒரு தலாக் மூலம் கால தவணை முடிந்த பிறகு கணவன், மனைவி பிரிந்து விட முடியும். பிரிந்து வேறு திருமணங்களைச் செய்ய முடியும். ஒருமுறை தலாக் சொல்வதன் மூலம் இருவரும் மீண்டும் இணைவதற்கு வாய்ப்பிருக்கிறது. தலாக் என்பது பிரச்னைகளைத் தீர்க்க இறைவன் அருளிய மகத்தான ஏற்பாடு என்பதை உணர்த்த வேண்டும்.

* பாகப்பிரிவினையின் போது இஸ்லாமிய குடும்பவியல் சட்டத்தின் அடிப்படையிலேயே

சொத்துப் பங்கீடு நடைபெற வேண்டும்.

* குடும்ப நல ஆலோசனை மையங்கள் மூலம் சமுதாயத்தில் நிலவும் குடும்பவியல் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும்.

## ரமளானுக்கு பின்...

*முதல் பக்கத் தொடர்ச்சி*

ஈமான் கொண்ட என் அடியார்களிடம் (நபியே!) "கொடுக்கல் வாங்கலும், நட்பும் இல்லாத (இறுதி) நாள் வருவதற்கு முன்னதாகவே, அவர்கள் தொழுகையை முறையாகக் கடைப்பிடித்து ஒழுகட்டும், நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து, இரகசியமாகவும் பகிரங்கமாகவும் (தான தருமங் களில்) செலவு செய்யட்டும்" என்று நீர் கூறுவீராக. (14:31)

மறுமை நாள் எந்த பேரமும் பயனளிக்காத நாள் அந்நாளில் ஈடேற்றம் பெற முஃமின்கள் இபாதத்துகளை பேணி கடைப்பிடிக்கவேண்டும்

நம்பிக்கை கொண்டு, நன்மையை எதிர்பார்த்து ரமளான் மாதம் நோன்பு நோற்பவரின் முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்' என அபூஹுரைரா (ரலி) அறிவித்தார். (நூல்: ஸஹீஹுல் புஹாரி 38)

ஈமானுடன் கடமைகளை நிறைவேற்றி ஈமானிய பயிற்சி பெற்ற நாம், அதே ஈமானிய உறுதியுடன் ரமளானுக்கு பின்னரும் சிறப்பாக நன்மைகளை கடைப்பிடித்து கடமைகளை நிறைவேற்றக்கூடிய வர்களாக இருப்பதன் மூலம்தான் நமது பயிற்சி பயனுள்ளதாக அமையும்.

**2. இறையச்சத்தை வளர்ப்பதற்கான பயிற்சி**

நோன்பை நம்மீது அல்லாஹ் கடமையாக்கியதன் நோக்கமே நாம் இறையச்சமுடையவர்களாக திகழ வேண்டும் என்பதற்காகத்தான்.

ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது; அதன் மூலம் நீங்கள் இறையச்சமுடையவர்கள் ஆகலாம். (2:183)

இறையச்சத்தை வளர்க்கவேண்டுமென்பதற்காக நாம் நோன்பு காலங்களில் பசித்தும் தாகித்தும் இச்சை களை தவிர்த்தும் பாவங்களைவிட்டு விலகியும் மறதியால் சிறு தவறு நிகழ்ந்தால்கூட أستغفر الله (அஸ்தக்ஃபிருல்லாஹ்) என்று சொல்லும் அளவிற்கு பேணுதலாக இருந்து வளர்த்துகொண்ட தக்வாவை (இறையச்சத்தை) ரமளானுக்கு பின்னரும் நாம் பாதுகாக்கவேண்டும். மரணம் வரையில் தக்வாவை தக்கவைத்து கொள்ளவேண்டும். அப்போதுதான் நாம் முஸ்லிமாக மரணிக்கக்கூடிய வாய்ப்புகிடைக்கும்

அல்லாஹ் கூறுகிறான்: நம்பிக்கை கொண் டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரிக்காதீர்கள். (3:102)

**(திலாவத்துல் குர்ஆன்) குர்ஆன் ஓதுவதற்கான பயிற்சி**

சங்கைமிக்க குர்ஆனை அருளியதன் மூலமாக அல்லாஹ் ரமளான் மாதத்தை சிறப்பாக்கியுள்ளான். அத்தகைய மாதத்தில் நாம் குர்ஆனை ஒருமுறை இருமுறை பலமுறை என ஓதி பயிற்சிபெற்றோம் அக்குர்ஆன் நம்முடைய ஈமானுக்கு உரமாகவும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் உள்ளது உண்மை இறைநம்பிக்கையாளர்கள் அதனை முறையாக ஓதி கடைப்பிடித்து வரவேண்டுமென்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்

யாருக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோமோ அவர்கள் அதை எவ்வாறு ஓதி(ஒழுகி)ட வேண்டுமோ, அவ்வாறு ஓதுகிறார்கள்; அவர்கள் தாம் அதன் மேல் நம்பிக்கையுள்ளவர்கள்; யார் அதை நிராகரிக்கின்றார்களோ அவர்கள் பெரும் நஷ்டவாளிகளே! 2:121

ரமளானில் நாம் பெற்ற பயிற்சியை பேணி கடைப்பிடித்து வாழ்வதனால் மறுமை நஷ்டத்தை தவிர்த்துகொள்ளமுடியும்

**3. திக்ர், துஆ விற்கான பயிற்சி**

நோன்பு நாள்களில் அன்றாடம் சிறப்புவாய்ந்த பல திக்ர்களையும் துஆக்களையும் நன்மை நாடி நாம் ஓதி வந்தோம் இன்னும் சிலர், புதிய திக்ர் துஆக்களை மனனம் செய்திருப்பார்கள். இவ்வாறு நாம் தேடிய அல்லாஹ்வின் மன்னிப்பும் அவனது கருணையும் ரமளானுக்கு பின்னரும் தேடக்கூடிய வர்களாக இருக்கவேண்டும்.

ரமளானுக்கு பின்னர் நாம் பெற்ற பயிற்சி யையும் தேடிய நன்மைகளையும் ஈமனுடனும் இறையச்சத்துடனும் கடைப்பிடித்து வாழ்கின்றவர் களாக இருப்போமாக!...

உமக்கு மரணம் வரும்வரை உமது இரட்சகனை வணங்குவீராக! (15:99)

தலையங்கம்

# குர்ஆனைப் பற்றிப் பிடியுங்கள் !

அகிலத்தாரால் ஒரு புத்தகம் அதிகளவு மதிக்கப் படுகின்றதென்றால் அது குர்ஆன்தான். அதே வேளையில், பெரும்பான்மையினரால் மதிக்கப்பட்டு, படிக்கப்படாமல் இருக்கும் புத்தகமும் குர்ஆன்தான். "இது அகிலத்தாருக்கு ஒரு நல்லுரையேயன்றி வேறில்லை"(68.52) என்று தன்னை உலகம் முழுவதற்கும் ஏற்ற புத்தகம் என பறைசாற்றிக் கொள்கிறது குர்ஆன்.

வாய்ப்புக் கேடாக, இதன் அருமை பெருமைகளை முஸ்லிம் சமூகம் அறிந்திராத காரணத்தினால் இழிவுக்குள்ளாகி பொதுத்தளங்களில் வெட்கித் தலைகுனிந்து நிற்கிறது. இனி வளர்ந்து வரும் இளம் தலைமுறையினர்களும் இந்த நிலைக்குத் தள்ளப்படுவது சிறந்ததல்ல.

குர்ஆனைப் பொருளுணர்ந்து படித்து படிப்பினை பெறும் சமூகத்தை உருவாக்கி, உலகப் பிரச்னைகளுக்கு தீர்வு தரும் ஆளுமைகளை கட்டமைக்க வேண்டிய காலம் இது. பொருளுணர்ந்து என்றால், தங்கள் மொழிகளில் ஆழச்சென்று, ஓர் எல்லைக்குள் நின்று, அறிஞர்கள் அளித்த விளக்கங்களின் துணை கொண்டு வாசிப்பதாகும்.

நவீன கால முற்போக்குச் சிந்தனைகளின் பூதாகரக் கேள்விகளுக்கு தக்க பதில்களைத் தரும் ஒரே நூலாக இது இன்னும் இனியும் விளங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அதிலிருக்கும் பதில்களைத் தேடும் பொறுமையும் நுணுக்கமும் கொண்ட ஆளுமைகளை வளர்ப்பதுதான் இங்கே பிரதான கேள்வி! அந்தக் கேள்வியை கேட்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியதே இங்கே முஸ்லிம் சமூகம் செய்த மிகப்பெரிய பிழை என்று எண்ணத் தோன்றுகிறது.

ஒவ்வொரு வீட்டிலும், நட்பு வட்டத்திலும், நிகழ்ச்சிகளிலும், கல்வி நிலையங்களிலும் குர்ஆன் வாசிக்கப்பட வேண்டும். வெறும் மந்திர நூலாக கண்ட கண்களை கழற்றி எறிந்து விட்டு, மருத்துவ நூலாக, விஞ்ஞான நூலாக, ஆய்வு நூலாக, உளவியல் நூலாக, சமூக பொருளாதார குடும்ப பிரச்னைகளுக்கு வழிகாட்டி விடை சொல்லும் நூலாக பார்க்கப்பட வேண்டும்.

முன்னோர்களின் வாழ்க்கை குர்ஆனாகவே இருந்தது என்கிறது வரலாறு. குர்ஆனைக் குறித்த தாக்கமும் ஏக்கமும் அறிஞர்களால், தலைவர்களால், அமைப்புகளால், இயக்கங்களால் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குர்ஆனைப் பற்றிப் பிடிக்கும் சமுதாயம், என்று உருவாகுமோ, அன்று முஸ்லிம்களின் வெற்றி மிக சமீபத்தில் இருப்பதை அனைவராலும் காண முடியும். வளரும் இளம் பருவத்தினரிடையே குர்ஆனின் மகத்துவத்தைச் சொல்லி வளர்ப்பது காலத்தின் கட்டாயம்.

குர்ஆனுக்கென்று நாள்தோறும் சில மணித்துளிகளை ஒதுக்குங்கள். விரும்பிப் படியுங்கள். இறைவனின் படைப்பாற்றல், அவனின் உள்ளமை, மகத்துவம், அன்பு, கருணை குறித்த கல்விகளால் நம்பிக்கையும், சிந்தனையும் முதிர்ச்சி அடையும். குர்ஆனைப் பற்றிப் பிடிப்பவர், பிரபஞ்சப் பூட்டின் திறவுகோலை தன் கையில் வைத்திருப்பதற்குச் சமமாவார்.

வேதவரிகள்

## ஓ மனிதர்களே! - இறைவன் ஒருவன்தான்.

மனிதர்களே! உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனை (மட்டுமே) நீங்கள் வழிபடுங்கள். (அதனால்) நீங்கள் (எல்லாத் தீமைமகளிலிருந்தும்) தவிர்ந்துகொள்ளலாம். (அல்குர்ஆன்221)

இந்த வசனம் ஒட்டுமொத்த மனித சமூகத்தையும் அழைத்துக் கூறுகிறது. உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தவரையும் படைத்த உங்கள் இறைவனை ஒருவன் என்று நம்புங்கள். அவனல்லாத வேறு யாரும் உங்களுக்கு உணவளிக்கும் இறைவன் கிடையாது என்பதை அறிந்துகொண்டே பயனோ இடரோ அளிக்க இயலாத பொய்த் தெய்வங்களை அவனுக்கு இணையாக்காதீர்கள்.

ஒருவர் இவ்வுலகத்தின் படைப்புகள் குறித்துச் சிந்தித்தால், அவற்றைப் படைத்தவனின் ஆற்றல், விவேகம், அறிவு, உறுதி மற்றும் மகத்தான அதிகாரம் ஆகியவற்றை நிச்சயம் அவர் புரிந்து கொள்வார். (ஏனெனில், இறைவன் ஒருவன்தான் என்பதற்கும் இந்த அகிலமே சான்றாகும்.)

பரந்து விரிந்த நெடிதுயர்ந்த வானங்கள், அவற்றில் மிதக்கின்ற ஒளி சிந்துகின்ற கோள்கள் மற்றும் விண்மீன்கள், அவை தினமும் தம்மைத் தாமே சுற்றிக் கொண்டு பிற கோள்களையும் சுற்றி வருகின்ற விதம், பூமியை அதன் எல்லாப் புறங்களிலும் சூழ்ந்துள்ள கடல்கள், பூமி அசையாமல் நிலையாக இருக்கவும், அதில் வசிப்போர் அமைதியாக இருக்கவும் வேண்டி அதன் மீது நிறுத்தப்பட்டுள்ள "வெண்மை, சிவப்பு மற்றும் அடர்ந்த கருமை ஆகிய பல வண்ண மலைகள் உள்ளன." (3527) எனும் அல்குர்ஆன் வசனத்திற்கொப்ப நிறத்தாலும் தோற்றத்தாலும் வேறுபட்ட பல மலைகள், மக்களின் பயன்பாட்டிற்காக ஒரு பகுதியிலிருந்து வேறொரு பகுதிவரைப் பாய்ந்தோடும் ஆறுகள், பூமியில் பரவியிருக்கும் பல்வேறு உயிரினங்கள், மண்ணும் நீரும் ஒத்த இயல்புடையதாக இருந்தும், அவற்றால் முளைத்த பல்வேறு தோற்றமும் நிறமும் சுவையும் கொண்ட தாவரங்கள் ஆகியவற்றை ஒருவர் ஆழ்ந்து சிந்தித்தால், படைத்தவன் ஒருவன் இருக்கின்றான் என்பதற்கும், அவன் மகத்தான ஆற்றல் படைத்தவன், மதிநுட்பம் வாய்ந்தவன் என்பதற்கும், தன் படைப்புகள் மீது அவன் கருணை மிக்கவன், பரோபகாரி என்பதற்கும் அத்தாட்சி உண்டு என்பதை நன்கறியலாம்.

ஆகவே, மனித சமுதாயம் இதனை சிந்தித்துணர்ந்து இறைவன் ஒருவனை ஏற்றுக் கொண்டு, அவனையே வணங்கி வழிபட வேண்டும். இதனால் எல்லாத் தீமைகளிலிருந்தும் மனித சமூகம் தவிர்ந்து கொள்ளலாம்.

தூதர் மொழிகள்

## ஏழைகளை மகிழ்விப்பீர்!

அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கின்றார்கள்.

நபி(ஸல்) அவர்கள் ஒரு "ஸாஉ" அளவு பேரித்தம் பழத்தையோ, அல்லது ஒரு "ஸாஉ" அளவு தீட்டாத கோதுமையையோ நோன்பு பெருநாள் தர்மம் வழங்குமாறு கட்டளையிட்டார்கள்.

நூல்கள்: புகாரீ1507, முஸ்லிம்1635, திர்மிதீ611, அபூதாவூத்1373, நஸயீ2455, இப்னுமாஜா2455, அஹ்மத்4246, அல்முஅத்தா553.

*பெருநாள் பண்டிகை திருவிழா என்பது மனிதனின் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும். பண்டிகை திருவிழா காலங்களில் தன் குடும்பம் மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களுக்கு தேவையானவற்றை வாங்கித் தந்து அவர்களின் மகிழ்ச்சியை கண்டு அகமகிழ்வர் குடும்பத் தலைவர்கள்.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை மக்கள் இரண்டு பெருநாள்களை கொண்டாட அனுமதிக்கிறது. ரமளான் நோன்பிருந்து முடிந்ததும் நோன்பு பெருநாள் கொண்டாட அனுமதிக்கிறது. அடுத்து துல்ஹஜ் மாதம் 10ம் நாள் ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாட அனுமதிக்கிறது.

மகிழ்ச்சியாக கொண்டாட அனுமதிக்கும் இஸ்லாம், அந்த நாள்களில் ஏழைகளும் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும். என்பதைக் கருத்தில் கொண்டு ஏழைகளுக்கும் தர்மம் செய்யக் கூறுகிறது.

ஹஜ்ஜுப் பெருநாள் அன்று ஆடு, மாடு அறுத்து அந்த இறைச்சியை ஏழைகளுக்கும் வழங்குமாறு கூறுகிறது. இதுபோல் நோன்பு பெருநாள் அன்று பெருநாள் திடலுக்கு தொழச் செல்லும் முன்பே தர்மம் செய்யுமாறு கூறுகிறது. அதிலும் அந்த தர்மம் கடமை என்கிறது. சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் கணக்கில் கொண்டு தலைக்கு ஒரு "ஸாஉ" அளவுக்கு தர்மம் செய்யுமாறு வலியுறுத்துகிறது.

உணவுப் பொருள்கள், அந்த உணவுப் பொருள்களுக்குரிய பணம் என வழங்கி ஏழைகளும் இல்லாதவர்களும் கூட சந்தோஷமாக பெருநாள் கொண்டாட வேண்டும் என்ற நோக்கிலேயே நபி(ஸல்) அவர்கள் "பெருநாள் தர்மம்" வழங்குமாறு வலியுறுத்துகிறார்கள்.

### வாசகர் கருத்து!

உங்கள் பத்திரிகை பள்ளிவாசலில் விநியோகிப்பதைப் பார்த்து பணம் தந்து வாங்க போனேன். இலவசம் என்று நீட்டினார் ஒரு வாலிபர். ஆச்சரியம் அடைந்து வாங்கிப் படித்தேன். நல்ல முயற்சி, நல்ல ஆக்கங்கள். வாழ்த்துகள்.

– முஹம்மது ஃபாரூக், ராயபுரம்.


கௌரவ ஆலோசகர்கள் & இதழ் மேற்பார்வை

மௌலவி M. பஷீர் ஃபிர்தவ்ஸி
மௌலவி முஹம்மது இஸ்மாயீல் காஷிஃபி
அபூமொஹ்சின் | P. அப்துர் ரஹ்மான்
நண்பன் அபூபக்கர்

இதழ் வடிவமைப்பு: "1st Step" இம்ரான்

ஆசிரியர்: மக்தூம் தாஜ்

உங்கள் விமர்சனங்கள் மற்றும் கருத்துகள் இதழில் இடம்பெற...
கட்டுரைகளை அனுப்ப : azhaippoli2017@gmail.com
விளம்பரத் தொடர்புக்கு : 9884928787



### Advertisement Tariff

| | |
|---|---|
| **Front Page (COLOR)** | |
| Quarter Page | - 3000 |
| Double V.Card Size | – 2300 |
| Visiting Card Size | – 1500 |
| **Center Page (COLOR)** | |
| Double V.Card | – 2000 |
| Visiting Card | – 1300 |
| **Last Page (COLOR)** | |
| Quarter Page | - 2800 |
| Double V.Card Size | – 2000 |
| Visiting Card Size | – 1500 |
| **Inner Page (B/W)** | |
| Quarter Page | – 2000 |
| Double V.Card | – 1500 |
| Visiting Card | – 800 |

குறிப்பு: தொடர்ந்து தரப்படும் 6 விளம்பரங்களுக்கு 10% தள்ளுபடி.

## பண்பாட்டை உருக்குலைக்கும், மத்தியின் மத அரசியல்...

மோடி பிரதமராகப் பதவியேற்றபோது சிறுபான்மையினருக்கும் நடுநிலையாளர்களுக்கும் என்ன அச்சம் இருந்ததோ, அதை மெய்ப்பிக்கும் வகையில் இருக்கிறது மத்திய அரசின் புதிய அறிவிப்பு. கால்நடைச் சந்தைகளில் இறைச்சிக்காகக் காளைகள், பசுக்கள், எருமைகள், ஒட்டகங்கள் போன்றவற்றை விற்கக் கூடாது என்ற இந்த அரசின் உத்தரவு, பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

அனைத்து விலங்குகளையும் நேசிக்கும் ஜீவகாருண்யம்தான் இந்த அறிவிப்புக்குக் காரணம் என்று நம்புவதற்கு எந்த அடிப்படையும் இல்லை. சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகமெங்கும் "நமோ மீன் ஸ்டால்" திறந்து மோடிக்கு வாக்களிக்கப் பிரச்சாரம் செய்தவர்கள்தான் பா.ஜ.கவினர். ஆடு, கோழி, மீன் ஆகியவற்றை இறைச்சிக்காக வாங்கவும் விற்கவும் தடையில்லை; ஆனால் பசுக்கள், காளைகள், ஒட்டகங்களை மட்டும் இறைச்சிக்காக விற்கத் தடை என்றால், இதன் பின்னணியில் இருப்பது அப்பட்டமான மதவாதம் என்பதுதானே உண்மை?

பல்வேறு தேசிய இனங்கள், பல்வேறு மொழிகள், பல்வேறு சாதிகள், பல்வேறு தட்பவெப்ப நிலைகள், பல்வேறு பண்பாடுகள் என்ற பன்மைத் தன்மைதான் இந்தியாவின் அசைக்க முடியாத அடித்தளம். ஆனால், இந்த அடித்தளத்தையே ஆட்டம் காணவைக்கும் வகையில்தான் இருக்கிறது பா.ஜ.க. அரசின் அறிவிப்பு. எந்த உணவுக் கலாச்சாரமும் இன்னொன்றைவிட உயர்ந்ததோ தாழ்ந்ததோ இல்லை. எதையும் யார் மீதும் திணிப்பது ஜனநாயக விரோதம்.

அதுவும், இந்தத் தடையை நாடாளுமன்றத்தில் விவாதிக்காமல், மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்காமல் மத்திய அரசு கொண்டுவந்திருப்பது மோடி அரசுக்கு, தன் இந்துத்துவ அரசியல் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதில் இருக்கும் ஆர்வத்தைக் காட்டுகிறதே தவிர, ஜனநாயகத்தில் இருக்கும் நம்பிக்கையைக் காட்டவில்லை.

கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு, விவசாயம் எனப் பல துறைகளில் சமூகத்தையும் நாட்டையும் ஒட்டுமொத்தமாகப் பாதித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரச்னைகளில் கவனம் செலுத்த வேண்டிய மத்திய அரசு, இப்படி சர்ச்சைக்குரிய வகையில் மற்றவர்களின் பண்பாடுமீது தாக்குதல் தொடுக்கும் விதமாகத் தடையைக் கொண்டுவருவது நல்லதல்ல.

இந்தியாவின் பன்முகத்தன்மை மீதும் சகோதரத்துவத்தின் மீதும் நம்பிக்கையுள்ள அனைவருமே இந்தத் தடையை எதிர்த்துக் குரல் கொடுக்கவேண்டிய தருணம் இது.

– நன்றி : ஆனந்த விகடன்

## பயனுள்ள கல்வியைத் தேடுங்கள்!

விடுமுறை முடிந்து பள்ளிக்கு, கல்லூரிக்குச் செல்லும் தருணம் இது. காலை பள்ளி சென்று, பாடம் பயின்று, பயின்றதை நோட்டில் பதிவிட்டு, மதிய உணவு உண்டு, மாலை மங்கி, வீடு திரும்பி, சிற்றுண்டி சாப்பிட்டு, மாலை பாடசாலை சென்று, வீட்டுப் பாடம் எழுதி, மனனமிட்டு, ஆசிரியையிடம் ஒப்பித்து, திருத்தல் வாங்கி, மீண்டும் வீடு சென்று உணவு அருந்தி, சிறிது விளையாடி தூங்கச் சென்று, காலை எழுந்து, பல்தேய்த்து, குளித்து, ஒருமுறை பாடங்களை பார்வையிட்டு, தயாராகி பள்ளி சென்று, பாடம் பயின்று.. அப்பப்பப்பா..! படிக்கவே மூச்சு முட்டும்... ஆனால், பிள்ளைகளின் ஒருவருட சுழற்சிப் பணி இனி இதுதான். எதற்காக இவை செய்யப்படுகின்றன. கேட்டுப் பாருங்கள் பிள்ளைகளிடம்..

நான் இன்ஜினியர் ஆகி... நான் டாக்டர் ஆகி... நான் பைலட் ஆகி... நான் அது ஆகி.. நான் இது ஆகி... என்னவோ ஆவார்கள் என்ற கனவோடுதான் ஒவ்வொரு குழந்தையும் தம் பெற்றோர்களால் ஏற்றுமதி செய்யப்பட்ட கனவுகளை மூளைக்குள் சுமந்து ஸ்கூலுக்குச் செல்கிறார்கள்.


சரி.. இதுவெல்லாம் 'ஆவது' ஒருபுறம் இருக்கட்டும். இந்த கனவுகளை நனவாக்கி என்ன செய்வார்கள் இளம் தலைமுறையினர்கள். லட்சங்களை குவிப்பார்களா? பெரிய பங்களாக்களை கட்டுவார்களா? சமூகத்தில் பெரிய அந்தஸ்தை அடைவார்களா? கார், நீச்சல்குளம், ஷாப்பிங் மால், தங்க வைர வைடூரியங்கள் என்று ஆடம்பர வாழ்க்கையை வாழ்வார்களா? ஆம்.. இதைத்தான் அவர்களால் செய்யமுடியும். ஆனால், ஒருநாள் அனைத்தும் அவர்களை விட்டு விலகிவிடும். மரணம் கதவு தட்டி அனுமதி பெறாமல் அழைத்துச் செல்லும்.

இதற்கா இவ்வளவு தியாகங்கள்.. இன்னல்கள்... சகிப்புகள்..

நாம் இறந்த பின் யாருக்கு தேவையுள்ளோராய் இருந்தோம். யாருடைய கண்களில் நமக்கான கண்ணீரை முன்பதிவு செய்து வைத்தோம். நமக்குப் பின் நாம் காட்டிய வழியில் நடப்பவர்கள் எத்தனைபேர்? நம் இலக்குதான் என்ன? நோக்கம் அற்று இப்படி வாழ்வது ஒரு வாழ்க்கையா?

இறைவன் புறத்திலிருந்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விசேஷ திறமை வழங்கப்பட்டிருக்கிறது. அது என்ன என்பதை கண்டுபிடியுங்கள். அதில் உங்கள் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுங்கள். அவற்றில் மென்மேலும் ஆர்வம் செலுத்தி, உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் உங்கள் சமூகத்துக்கும் உங்கள் நாட்டுக்கும் உங்கள் உலகத்துக்கும் பெருமை தேடி தாருங்கள். அதைவிட்டுவிட்டு, இத்தனை நாள்களாய் பிறரைப் பார்த்து





காப்பி அடித்தது போதும். அவனைப்போல், இவனைப்போல்... என்று!

நீங்கள் உங்களை அடையாளம் காணாத வரை, உங்கள் சமூகம் உங்களை அவர்களுக்கேற்றார்போல் வளைத்துக் கொண்டேதான் இருக்கும். சுயநலம் பிடித்த மனித மிருகங்கள் வாழும் பூமி இது. உங்களுக்குள் மறைந்திருக்கும் ஆளுமை என்ற புதையலை தேடி அலையுங்கள். அது கிடைத்த உடனேயே தோண்டி எடுத்துவிடுங்கள். எடுத்ததைத் துடைத்து தூசி தட்டி, இரும்புப் பெட்டியில் பூட்டிவிடாமல், உங்களுக்கும் சுற்றாருக்கும் பயனுள்ளதாய் செலவு செய்யுங்கள். அந்தச் செலவுகளுக்குக் கணக்குப் பார்க்கத்தான் இப்போது நீங்கள் செல்லும் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும். புதையலை செலவு செய்வதற்கு என்ன கல்வி தேவையோ அதை மட்டும் பயிலுங்கள்.

உங்கள் பார்வை விசாலமானது. உங்கள் சிந்தனை சிறப்பானது. ஒரு வட்டத்திற்குள் அவற்றை சுருக்கி விடாதீர்கள். வாழ்க்கை ஒருமுறைதான். சிந்தித்து செயல்படும் வேளை இது. எனவே பயனுள்ள கல்வியைத் தேடுங்கள்.

ஆறாம் வகுப்பு படிக்கும் மாணவன் மஹ்மூத் அக்ரம் 400 மொழிகளில் தட்டச்சு செய்து உலகையே வியக்க வைக்கிறான் என்றால், அந்தச் சிறுவன் அவனுக்குள் இருக்கும் ஆளுமையை கண்டுபிடித்து அதை வளர்த்துக் கொண்டதாலேயே முடிந்தது. அதற்கு அவனது பெற்றோர்கள் தந்த ஊக்கமும் பயிற்சியும் அவனின் அபார சாதனைக்கு உரமிட்டது.

நாசாவில் சான்றிதழைப் பெற்று, மைசூரில் கடந்த ஜனவரி 7ஆம் நாள் இளம் வி..ஞானி என்ற பட்டத்தை தட்டிச் சென்ற ரிஃபாத் ஷாரூக், தற்போது கையடக்க செயற்கைக்கோளை கண்டுபிடித்துள்ளார். இந்த செயற்கைக்கோள் ஜூன்மாதம் நாசாவால் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. 12ஆம் வகுப்பு தேர்வெழுதி ரிசல்டுக்காக காத்திருந்தபோது இச்செயற்கைக்கோளை அறிமுகப்படுத்தினார் ரிஃபாத். இதற்கு "கலாம் சாட்" என்று பெயரிட்டுள்ளார். இந்தத் தருணத்தில்தான் இவருக்கு 12ஆம் வகுப்பு தேர்வின் முடிவு வந்தது. ரிஃபாத் எடுத்த மதிப்பெண்கள் 750.

இப்போது சென்னை புதுக்கல்லூரியில் முதலாமாண்டு படித்து வருகிறார். தன் மதிப்பெண்களைக் குறித்து பெரிதும் அலட்டிக் கொள்ளாத ரிஃபாத், அடுத்ததாக நிலவில் தரையிறங்கும் வகையிலான ரோவர் இயந்திரத்தை தயாரிக்கும் ஆரம்பகட்டப் பணியில் இறங்கியிருக்கிறார். வாழ்த்துகள் ரிஃபாத் ஷாரூக்.


இறைவன் புறத்திலிருந்து வழங்கப்பட்ட ஆளுமையை கண்டுபிடித்து வளர்த்துக் கொண்டதால் ஏற்பட்ட விளைவே இந்த இரு மாணவர்களின் சாதனைகள். இதையே இஸ்லாம் பயனுள்ள கல்வி என்கிறது. இக்கல்வியை ஊக்குவிக்க ஒவ்வொரு பெற்றோரும் ஆசிரியரும் முயல வேண்டும்.

"இறைவா எனக்கு அதிகமான ஞானத்தை வழங்குவாயாக!" (திருக்குர்ஆன் 20:114)

யார் கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடக்கிறாரோ அவருக்கு அதன் மூலம் சொர்க்கத்திற்குச் செல்லும் பாதையை இறைவன் எளிதாக்குகின்றான். (முஸ்லிம்5192)

இறைவா பயனுள்ள கல்வியை எனக்குத் தருவாயாக! என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பிரார்த்திப்பார்கள்.

– M.T.

**ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்வில் ஒருமுறையேனும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல்!**

இஸ்லாமிய மார்க்கத்தின் கொள்கையை அறிந்து, நபித்தோழர்கள், தாபியீன்கள், தபஉ தாபியீன்கள் ஏற்று நடந்த அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை தக்க ஆதாரங்களோடு தரம் பிரித்து காட்டும் தரமிக்க நூல்...

நூல் பெயர் : "அஹ்லுஸ் ஸுன்னா கொள்கையின் அடிப்படைகள்"

ஆசிரியர் : மௌலவி M. பஷீர் ஃபிர்தவ்ஸி (பன்னூலாசிரியர்)

கிடைக்குமிடம்:

1. சாஜிதா புக் சென்டர் – 248, தம்புசெட்டி தெரு, முதல் தளம், மன்னடி, சென்னை.
2. ஸலாமத் புக் ஹவுஸ் – 90 (புதிய எண்185) லிங்கி செட்டி தெரு, மன்னடி, சென்னை.
3. பஷாரத் பப்ளிஷர்ஸ் – 76, அங்கப்பன் தெரு, மன்னடி, சென்னை.
4. தய்யிபா இஸ்லாமிக் பொட்டிக் – 2402, ஜட்ஜ் ராதாகிருஷ்ணன் சாலை, மேற்கு வேளச்சேரி, சென்னை. (வேளச்சேரி மஸ்ஜித் ரஹ்மான் அருகில்)
5. முபாரக் புக் டிப்போ – வின்செண்ட் ரோடு, தினகரன் அலுவலகம் அருகில், கோட்டை, கொவை.

# கவிக்கோ அப்துல் ரஹ்மான்...



இந்த உலகம் நம்முடையதல்ல.

நாமும் இந்த உலகத்துக்கு உரியவர்கள் அல்லர்.

கவிக்கோ அப்துல் ரஹ்மான் ஒரு மறக்க முடியா ஆளுமை...

“கோ” என்றால் மன்னன் என்று பொருள்! , கவிக்“கோ” என்றால் கவிதைகளுக்கு மன்னன் என்றாகும். ஆனால், கவிக்கோ என்ற பெயருக்குப் பின்னால் வரும் அப்துல் ரஹ்மான் (ரஹ்மானின் (அல்லாஹ்வின்) அடிமை) என்ற பெயரைச் சுட்டிக் காட்டி, நான் கவிதைகளுக்கு மன்னனாக இருந்தாலும் ரஹ்மானுக்கு அடிமைதான் என்று தன்னை எப்போதும் முன்னிறுத்திக் கொண்டவர்.

சென்ற நூற்றாண்டு இஸ்லாமிய ஆளுமைகளின் பட்டியலின் வரிசையில் இவரின் பெயரை தவிர்க்க முடியாது. எழுதப்பட்டுப் பராமரிக்க வேண்டிய ஒரு வரலாற்று ஆவணம் கவிக்கோ...

கவிதைகளின் வாயிலாக இறைவனின் இருத்தலை அறிவு ஜீவிகளுக்கு எளிமையாக எடுத்துச் சொன்னவர்.

இஸ்லாமிய மார்க்கத்தின் வளர்ச்சிக்கு உங்கள் பங்கு என்ன, என்று கேட்டபோது, நான் லேபல் இல்லாத அழைப்பாளன் என்று அங்கலாய்த்தவர்.

இஸ்லாமிய தமிழ் சமூகமும், தமிழ் மொழியும் ஒரு திறமைமிக்க எழுத்துத் தீரனை இழந்து நிற்கிறது.

இஸ்லாமிய மூலாதாரங்களை தமிழில் கொண்டு வருவதற்கு பாடுபட்டவர். ரஹ்மத் பதிப்பகம் சார்பாக வெளிவந்த புகாரி, முஸ்லிம், திர்மிதீ, நஸயீ, அபூதாவூத் மற்றும் தஃப்ஸீர் இப்னு கஸீரின் இதுவரை வெளிவந்த எல்லா பாகங்களிலும் தமிழாக்க ஆலோசகராக செயல்பட்டவர். சமீபத்தில் நிகழ்ந்த அபூதாவூத் நூல் வெளியீட்டின் போது, இஸ்லாமிய மூலாதாரங்களான ஆறு ஹதீஸ்களின் தொகுப்பையும், தஃப்ஸீரின் அனைத்துப் பாகங்களையும் விரைவிலேயே வெளிக்கொண்டுவர வேண்டும் என அவர் பேசியது, கண்களுக்கு முன் இமையாக அடிக்கடி வந்து போகிறது.

தமிழ் மொழியின் சிறப்புகளை கடல் கடந்து பறைசாற்றியவர். இவரின் எழுத்துலகம் என்பது கவிதைகள், கவிதைகளைக் குறித்த கட்டுரைகள், உலகக் கவிதைகள், மெய்யியல் கட்டுரைகள், ஆய்வு நூல்கள், மொழிபெயர்ப்பு, பதிப்பு என்று மிகவும் விரிவானது.

கடந்த 02.06.2017 அன்று இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றார் கவிக்கோ...

இதுபோன்ற தலைசிறந்த ஆளுமைகள் ஒவ்வொருவராய் வாழ்க்கைக்கு நிரந்தர விடுமுறை அளித்துக் கொண்டிருக்கின்றனர். இனிவரும் சமூகம் ஆளுமைகளை உருவாக்குமா? உருவாகுப வர்களை ஒதுக்கித் தள்ளுமா? காலத்தின் கையில் விடை கொடுத்து, கவிக்கோ அவர்களின் மறுமை வெற்றிக்காக இறைவனிடம் பிரார்த்திப்போம்...

**வாசகர் கருத்து!**

அழைப்பொலி படித்தேன். கட்டுரைகள் அனைத்தும் அருமை. ஆனால், கட்டுரைகள் மிகப்பெரிதாக இருப்பதால் வாசிப்பதில் சிரமம் ஏற்பட்டது. கட்டுரைகளை சுருக்கமாக பிரசுரித் தால் இன்னும் இனிது.

– அபூஃபாசில், ரெட்ஹில்ஸ்.

# இஸ்லாமியக் கொள்கையை அறிந்து கொள்வோம் - 2



சென்ற இதழ் தொடர்ச்சி...

**1. ஏக இறைவனாகிய அல்லாஹ்வை நம்புவது**

* அல்லாஹ் ஒருவன் தனித்தவன் (112:01)
* இணை, துணை அற்றவன் (6:163)
* அவனுக்குப் பெற்றோர் இல்லை (112:3)
* அவனுக்கு மனைவி இல்லை (6::101)
* அவனுக்கு சந்ததி இல்லை (112:3)
* அல்லாஹ் அகிலத்தின் ஒளி (ஜோதி) (24:35)
* ஒப்பு, உவமை இல்லாதவன் (42:11)
* வானங்கள், பூமியல் உள்ள யாவும் அவனுக்கே உரியன (2:255)
* அவனது அரசாட்சி வானங்கள் மற்றும் பூமியில் (அகிலத்தில்) பரந்து நிற்கிறது. அவற்றைப் பாதுகாப்பது அவனைச் சோர்வுறச் செய்வ தில்லை (2:255)
* நீங்கள் எங்கு இருப்பினும் அவன் உங்களுடன் இருக்கிறான் (57:4)
* “நாம் அவனது பிடரி நரம்பைவிட அருகில் இருக்கின்றோம்” என இறைவனே அறி வித்துள்ளான் (50:16)
* அவன் ஒவ்வொரு பொருளையும் சூழ்ந்திருக்கின்றான் (41:54)
* என்றென்றும் நிலைத்திருப்பவன் (2:255)
* மரணம், அழிவு இல்லாதவன் (25:58)
* தூக்கம், கண்ணயர்வு போன்ற எந்தக் குறையும் இல்லாதவன் (2:255)
* அல்லாஹ், (உணவு பானம் பிராணவாயு போன்ற) எந்தத் தேவையுமில்லாதவன் (112:02)
* புறக்கண்களால் அவனைப் பார்க்க இயலாது (6:103)
* வணக்கத்திற்குரியவனும் அவன்ஒருவனே (4:36, 17:25, 20:14, 1:05)

**அவனுக்கே உரிய தனித்தன்மைகள்**

- அல்லாஹ் நித்திய ஜீவன், பேரண்டம் அனைத்தையும் நிர்வகிப்பவன் (2:255)
- அவன் மறைவான வெளிப்படையான அனைத்தையும் அறிபவன் (59:23)
- அவன் இதயங்களில் இருப்பவற்றையும் அறிபவன் (67:13)
- அவன் கேட்கும் பார்க்கும் அசாதாரண ஆற்றல் உள்ளவன் (40:56)
- படைக்கும் ஆற்றலும், கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் அவனுக்கு உரியவை (7:54)
- நினைத்ததைச் செய்யும் ஆற்றல் உள்ளவன் (நினைத்தபடியே) (85:16)
- அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் உள்ளவன் (67:01)
- அவன் தன் அடியார்கள் மீது மிக்க இரக்கமுள்ள வனாய் இருக்கிறான். (3:30)

வாழ்வாதாரங்கள் வழங்குபவன் இறைவனே...

தொடரும்...


**உம்முகுல்தூம் மகளிர் இஸ்லாமியக் கல்லூரி**

**மூன்று ஆண்டுகளில் இரு பட்டப்படிப்புகள்**

**ஆலிமா பட்டய படிப்பு: (03 வருடம்) :** ✱ 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். ✱ குர்ஆன் சரளமாகஓத தெரிந்திருத்தல் வேண்டும்.

**பிரஸ்டன் பன்னாட்டு கல்லூரியுடன் இணைந்து நடத்தப்படும்**

**B.A. இஸ்லாமியகல்வி (B.A.I.S) : (03 வருடம்) :** ✱ +2 தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். ✱ தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக பட்டம்.

**அஃப்ஸலுல் உலமா பட்டப் படிப்பு: (02/03 வருடம்)**

✱ குறைந்த பட்சகல்வித் தகுதி - 8ம் வகுப்பு ✱ சென்னை பல்கலைக்கழக பட்டம்.

**இத்துடன், பெண்களுக்கான பகுதி நேர வகுப்புகள்**

6 மாதம்/ 01 வருட தீனிய்யாத் வகுப்புகள் : ✱ கல்வித் தகுதி தேவையில்லை. ✱ உருது மொழிக்கென்று தனி வகுப்புகள் ✱ தையல் பயிற்சி மற்றும் கணினி பயிற்சி வகுப்புகள் ✱ தர்பியத் வகுப்புகளுடன் கூடிய ஒழுக்கப் பயிற்சி ✱ வருடாந்திர கோடைகால சிறப்பு வகுப்புகள்.

**சேர்க்கை நடைபெறுகிறது!**
**விண்ணப்பங்களுக்கு முந்துங்கள்!!**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : **முதல்வர், உம்மு குல்தூம் மகளிர் இஸ்லாமியக் கல்லூரி,**
37, ஆஷுர்கானா தெரு (அஹ்லே ஹதீஸ் மஸ்ஜித் பின்புறம்), ஆலந்தூர், சென்னை - 16
தொலைப்பேசி : **044 - 22348371** அலைப்பேசி :**9884439921, 9841299584**

# அழைப்புப்பணி நம் உயிர் மூச்சு – 2

சென்ற இதழ் தொடர்ச்சி...

### அழைப்பாளருக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்புகள்

*(நபியே!) நீர் கூறுவீராக, இதுவே எனது (நேரான) வழியாகும். நான் (உங்களை) அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறேன். தெளிவான ஆதாரத்தின் மீதே நானும் என்னைப் பின்பற்றிவோரும் இருக்கிறோம். அல்லாஹ் மிகப்பரிசுத்தமானவன். நான் (அவனுக்கு)இணைவைப்போரில் உள்ளவனுமல்ல. (12:108)*

* சுஃப்யானுத் தவ்ரி(ரஹ்) அவர்கள் கூறினார்கள், நன்மையை ஏவி தீமையைத் தடுப்பவர்களுக்கு மூன்று பண்புகள் அவசியமாகும்.

*1. ஏவுவதை தெரிந்திருக்க வேண்டும். 2. தடுப்பவைகளை தவறு என்று தெரிந்திருக்க வேண்டும். 3. ஏவும் போதும் தடுக்கும்போதும் நீதமாகவும் மிருதுவாகவும் சொல்ல வேண்டும்.*

* தவறைக்காணும் போது மூன்று முறைகளில் ஒன்றை கையாள வேண்டும்.

*1. கையால் தடுப்பது. இது குறிப்பிட்டவர்களுக்கே பொருந்தும். தந்தை தன் பிள்ளையை கட்டுப்படுத்துவது, அரசர் தன் பிரஜைகளை, கணவன் மனைவியை இவ்வாறு இது நீண்டு கொண்டே போகும்.... 2. நாவால் தடுப்பது. 3. மனதால் வெறுப்பது.*

*உங்களில் யார் தவறைக் காண்கின்றார்களோ, அதை கையால் தடுக்கட்டும், அதற்கு முடிய வில்லையென்றால் நாவால் தடுக்கட்டும், அதற்கும் முடியவில்லையென்றால் மனதால் வெறுக் கட்டும் அதுதான் ஈமானின் குறைந்த அளவு என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)*

• அழைப்பாளர் நல்லொழுக்கமுள்ளவராக இருக்க வேண்டும். உண்மை உரைத்தல், நம்பிக்கை, மற்றவர்களுக்கு உபகாரம் செய்தல், இறையச்சம், பொறுமை, அன்பாகப் பழகுதல், மென்மை, வாக்குறுதியை நிறைவேற்றல் போன்ற நற்குணமுள்ளவராக இருக்க வேண்டும்.

*(நபியே!) அல்லாஹ்வுடைய அருளின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (இரக்கமுள்ளவராக) நடந்து கொள்கிறீர். மேலும் சொல்லில் கடுகடுப்பானவராக இரக்கமற்ற இதயமுள்ளவராக நீர் இருந்திருப்பீரானால் உம்மிடமிருந்து அவர்கள் பிரிந்து சென்றிருப்பார்கள். ஆகவே அவர்(களின் பிழை)களை நீர் மன்னித்து (அல்லாஹ்விடம்) அவர்களுக்காக மன்னிப்புக் கோருவீராக (3:159)*

*(நபியே!) நிச்சயமாக மகத்தான நற்குணத்தின் மீதும் நீர் இருக்கின்றீர்; (68:4)*

* கெட்ட பழக்கங்களிலிருந்து முற்றாக தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

* அழைப்புப் பணியின் போது மற்றவர்களோடு ஹிக்மத்தாக (சாதுரியமாக) நடந்து கொள்ள வேண்டும். நாம் அழைப்பவர்களின் நிலைகளைத் தெரிந்து அதற்கேற்ப அவர்களை அழைக்க வேண்டும். அவர்களின் அறிவின் தரத்தைத் தெரிந்து அவர்களுடன் பேசவேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்

*(நபியே!) நீர் (மனிதர்களை) விவேகத்தைக் கொண்டும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! (16:125)*

*மனிதர்களின் அறிவுக்கு ஏற்றவாறு பேசுங்கள் அல்லாஹ்வும் அவனின் தூதரும் பொய்ப் படுத்தப்படுவதை நீங்கள் விரும்புகின்றீர்களா? என அலீ(ரலி) அவர்கள் கூறினார்கள். (புகாரி)*

• மக்கள் சடைவடையும் அளவுக்கு பேசக்கூடாது

*நாங்கள் சடைவடைந்து விடுவோமோ என்பதைப் பயந்து சில நாட்கள் இடைவெளி விட்டு நபி(ஸல்) அவர்கள் எங்களுக்கு உபதேசம் செய்வார்கள். (நஸாயி)*

• சொல்வதைச் செய்ய வேண்டும்.

*எவர் அல்லாஹ்வின் பக்கம் (மக்களை) அழைத்து, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்து நிச்சயமாக நான் (அல்லாஹ்வுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களில் உள்ளேன் என்று கூறுகின்றாரோ, அவரைவிட சொல்லால் அழகானவர் யார்? (41:33)*

*நீங்கள் செய்யாததை(ப்பிறருக்கு)க் கூறுவது அல்லாஹ்விடத்தில் வெறுப்பால் மிகப்பெரியதாகி விட்டது. (61:3)*

தான் சொல்வதை முதலில் செய்வது, இது ஒரு அழைப்பாளரின் பண்பு என்பதை இவ்விரண்டு வசனங்களும் வலியுறுத்துகின்றது.

• தஃவாப் பணியை மேற்கொள்ளும்போது வரும் சிரமங்களை பொறுமையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

*காலத்தின் மீது சத்தியமாக! நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான். விசுவாசங் கொண்டு, நற்கருமங்களையும் செய்து, சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், (பாவங்களை விடுவதிலும், நன்மைகளைச் செய்வதிலும் ஏற்படும் கஷ்டங்களை சகித்து) பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கின்றார்களே அத்தகையோரைத்தவிர. (103:1,3)*

அழைக்கப்பட வேண்டியவர்கள் யார்?...

தொடரும்...



# இறைவா என்னை மொபைல் ஃபோனாக மாற்றிவிடு!

ஓர் ஆசிரியை தன் ஆரம்பப் பள்ளி மாணவர் களிடம் "நீங்கள் இறைவனிடம் விரும்பியதை கேட்பதாக எண்ணிக் கொண்டு, அதனை ஒரு கட்டுரையாக எழுதித் தாருங்கள்" என்று கேட்டார். மாணவர்களும் தங்களது விருப்பங்களை கட்டுரையாக எழுதிக் கொடுத்தார்கள்.

அவற்றை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்த ஆசிரியை ஒவ்வொன்றாக வாசிக்க ஆரம்பித்தார். அந்த கட்டுரைகளில் ஒன்று அவருடைய மனதைத் தொட்டு விட்டது. உடனே, அழ ஆரம்பித்து விட்டார். அந்த நேரம் பார்த்து வீடு வந்த கணவன் மனைவி அழுவதைப் பார்த்து "ஏன் அழுகிறாய்?" என கேட்டான்.

"ஒரு மாணவனின் வரிகள் என்னை அழ வைத்து விட்டன" என்றாள். "என்ன எழுதியுள்ளான்?" என அவர் வினவ, "இதோ எடுத்துப் படித்துப் பாருங்கள்" என கொடுத்தார். அவர் வாசிக்க ஆரம்பித்தார்...

"இறைவா! என்னை நீ Mobile Phoneஆக ஆக்கு வாயாக என்று விசேஷ பிரார்த்தனை செய்கின்றேன். ஏனெனில்,

வீட்டில் எனக்கு பிரத்யேக இடம் கிடைக்கும்.

எந்த இடையூறுகளும் இல்லாமல் நான் சொல்வதைக் கேட்பார்கள்.

என் தந்தை களைப்படைந்து வேலையிலிருந்து வரும் வேளைகளில் அவருடைய அருகாமை எனக்கு கிடைக்கும்.

கவலையான நேரங்களில் கூட தாய் என்னோடு நெருங்கி இருப்பாள்.

என்னை கையில் சுமப்பதற்காக எனது சகோதரர்கள் சண்டை இட்டுக் கொள்வார்கள்.

இறைவா நான் இறுதியாக கேட்பதெல்லாம் அவர்களை நான் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான்...

நான் உன்னிடம் அதிகமாய் ஒன்றும் கேட்டு விடவில்லை... ஒரு Mobile Phoneனைப் போல வாழ வேண்டும் என்று மட்டுமே கேட்கிறேன்."

வாசித்து முடித்த கணவன் சொன்னார்ஞ் "பாவம் அந்த குழந்தைஞ் அவனது பெற்றோர் எவ்வளவு மோசமானவர்களாய் இருப்பார்களோ"

இதைக் கேட்டு விட்டு மீண்டும் அழுத ஆசிரியை சொன்னார்.

"அதை எழுதியது எங்கள் குழந்தைதான்"

– சமூக வலைத்தளத்திலிருந்து...

### வாசகர் கருத்து!

மாதம் ஒருமுறையாக வெளிவரும் அழைப்போலி எட்டுபக்கங்கள் மிகக் குறைவாக உள்ளது. பக்கங்கள் அதிகப்படுத்தினால் வாசகர்கள் அதிக பயனடைவார்கள். "புத்தகங்களை மஹராக பெற்ற முன்மாதிரிப் பெண்மணி" என்ற செய்தி மிக அருமை. காலத்திற்கேற்ற தேவைதான். இது போன்ற பெண்கள் மேலும் மேலும் உருவாக வேண்டும்.

– அப்துர் ரஹ்மான், பூந்தமல்லி.

# உங்கள் மார்க்கம் இஸ்லாம்!

இஸ்லாம் என்ற வார்த்தைக்கு அமைதி என்று பொருள். இஸ்லாத்தின் அடிப்படையே அமைதியை இவ்வுலகுக்கு பறைசாற்றுவதுதான். மக்களை அமைதியின் பக்கம் அழைக்கும் இஸ்லாம் ஒரு மதமல்ல! அது ஒரு வாழ்வியல் வழி. மனிதன் பிறந்தது முதல் இறப்பது வரை எப்படி வாழ வேண்டும் என்று தெள்ளியதொரு வழியைக் காட்டுகிறது. இதை உளமாற ஏற்றுக் கொண்டவர்களே முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்றனர். முஸ்லிம்கள் தங்கள் வாழ்வில் அதை நடைமுறைப்படுத்தி, பிற மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் இம்மார்க்கத்தின் இனிய செய்திகளை எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றனர்.

மனிதன் இயல்பிலேயே தவறு செய்யக் கூடியவனாக, பலவீனனாகவே உள்ளான். தவறு செய்பவனை திருத்தி, திசைமாறி திக்கிட்டுத் தவிக்கும் மனிதனுக்கு ஆறுதல் கூறி, அரவணைத்து அன்பு செலுத்தி, அவனை நேர்வழியில் செலுத்த ஓர் ஒப்பற்ற வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. அந்த வழிகாட்டுதல், தன்னைப் போன்றே தவறில் உழன்று கொண்டிருக்கும் பலவீன மனிதப் படைப்பிடம் நிச்சயமாக இருக்காது. என்னதான் அனுபவம் ஒரு மனிதனுக்கு சிறந்த பாடமாக இருந்தாலும், தான் இருக்கும் வயதும், முதிர்ச்சியும் உள்ள இன்னொரு மனிதனுக்கு, சரியான வழிகாட்டுதலையும், நேரிய வழியையும் சகமனிதனால் வழங்கிட இயலாது. இதுபோன்ற வேளைகளில்தான் இஸ்லாம் மனிதனை மனிதனாகப் பக்குவப்படுத்துகிறது. வாழ்க்கையின் நோக்கத்தை நேர்த்தியாகச் சொல்லி, கடந்துபோன ரணங்களை இறைவனின் விதியின் மேல் சாட்டி, நடக்கவிருக்கும் நல்லவைகளை மட்டும் நினைவில் நிறுத்தி, கவலைகொள்ளா சமூகத்தை கட்டமைக்கிறது.

இஸ்லாம் அமைதியை விதைத்து, அன்பை வளர்த்து, ஒற்றுமை எனும் கிளைகளை நிழலாகத் தந்து, அழிக்கமுடியா விருட்சமாக வளர்ந்து நிற்கிறது. தீண்டாமையை ஒழித்து, ஜாதி மத பாகுபாடுகளை உடைத்தெறிந்து, சமத்துவத்தை போதித்து, சமாதானத்தைச் சொல்லி, நீதியை நிலைநாட்ட, நேர்மையை பறைசாற்ற, அநீதியிழைக்கப்பட்டோருக்கு ஆதரவளிக்க, ஆதரவற்றோருக்கு அபயமளிக்க வீறுகொண்டு எழுந்த விவேகமான மார்க்கமாகும் இஸ்லாம். உலகத்தில் அமைதியை, ஒற்றுமையை, சமாதானத்தை, சமத்துவத்தை, நீதியை விரும்பும் ஒவ்வொரு மானுடனுக்கும் சொந்தமான மார்க்கம் இஸ்லாம்.

மனிதன் இறந்துபோவது இயற்கை. ஆனால், இலக்கேயில்லா இறப்பினை எட்டி உதைக்கிறது இஸ்லாம். பிறப்பது, வாழ்வது, இறப்பது ஒரு சோதனை. உன் ஒவ்வொரு நிமிடமும் கண்காணிக்கப்படுகிறது. நீ செய்யும் செயல்கள் குறித்து, உன் இறப்புக்குப் பின் கேள்விகள் கேட்கப்பட இருக்கின்றாய். எனவே, உலகத்தில் நல்ல வாழ்க்கையை வாழ்ந்து விட்டுச்செல்! என்று அன்புக் கட்டளைகளோடு, அறிவார்ந்த அணுகுமுறைகளோடு, அடுக்கடுக்கான ஆதாரங்களோடு, சுவனத்தின் இன்பங்களை கண்முன் நிறுத்தி, நரகத்தின் வேதனைகளை படம்பிடித்து பயம் காட்டிக் கர்ஜித்து சத்தியக் குரலிடுகிறது இஸ்லாம்.

இது ஒட்டுமொத்த மனிதசமூகத்துக்கும் இறைவனின் புறத்திலிருந்து இறக்கப்பட்ட மார்க்கம் ஆகும். இது முஸ்லிம்களுக்கு மட்டும் உரித்தானது அல்ல. "இஸ்லாம், 1. இறைவன் 2.இறைவனின் வேதம் 3.இறைவனின் தூதர் ஆகிய மூன்று விஷயங்களைக் குறித்துப் பேசும் போது, அந்த மூன்றும் உலகத்தார் அனைவருக்கும் ஏற்ற பொதுவான கருத்துகளாகவே கிழக்கண்டவாறு தன்னை முன்னிறுக்கிறது."

1. மனிதர்களே! உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனுக்கே அடிபணியுங்கள். (திருக்குர்ஆன்2.21)

2. இது (குர்ஆன்) உலகமக்கள் அனைவருக்கும் நல்லுரையேயாகும். (திருக்குர்ஆன்38.87)

3. (நபியே) நாம் உம்மை உலகத்தாருக்கு அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம். (திருக்குர்ஆன்21.107)

இஸ்லாம் ஓர் உலக மார்க்கம். இஸ்லாம் ஓர் உன்னத மார்க்கம். இஸ்லாம் ஓர் உண்மை மார்க்கம். ஆக, இஸ்லாம் உங்கள் மார்க்கம்!




வாசகர்களே!

நீங்களும் உங்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் தெரிவிக்கலாம்...

அலைப்பேசி, வாட்ஸ்அப் : 9884928787

மின்னஞ்சல் : azhaippoli2017@gmail.com

## திருக்குர்ஆன் போதிப்பது இதுதான் - 2

சென்ற இதழ் தொடர்ச்சி...

தர்மம் செய்து விட்டு சொல்லிக்காட்ட கூடாது. (2:262–264)

நல்லதையே தர்மம் செய்ய வேண்டும்.. (2:267)

தேவையுள்ளவர்களை கண்டுபிடித்து உதவ வேண்டும். (2:273)

வட்டி வாங்க கூடாது. (2:275–276,279)

கடன் வாங்கியவருக்கு திருப்பி தர முடியாவிட்டால், அவருக்கு அதற்கான வாய்ப்பு கிடைக்கும்வரை அவகாசம் கொடுக்க வேண்டும். (2:280)

கடன் கொடுக்கல் வாங்கல்களை எழுதி கொள்ள வேண்டும். அதற்காக நல்ல சாட்சியாளர்களை வைத்து கொள்ள வேண்டும். எழுத முடியாவிட்டால், அடைமானங்களை வைத்து செய்ய வேண்டும். (2:281–282)

நன்மையானவற்றை ஏவி தீயதை தடு. (3;104,110,114)

கோபத்தை அடக்கிகொள். மனிதர்களை மன்னித்து விடு. (3:134)

தவறு என்று அறிந்த பின், அதில் தொடர்ந்து இருக்காதே. (3:135)

மற்றவர்களுடன் மென்மையாக நடந்து,சொல்லில் கடுமையாக இல்லாமலும், மற்றவர்களுடன் ஆலோசனை செய்பவராக இருக்க வேண்டும். (3:159)

கஞ்சத்தனம் கூடாது. (3:180)

மற்றவர்களின் நோவினை செய்யும் வார்த்தைகளை கேட்டாலும், பொறுமையாக இரு. (3:186)

வானங்கள் பூமியின் படைப்புகளை சிந்தித்துப் பார்க்க வேண்டும். (3:190–191)

நற்கூலி வழங்கப்படுவதில் ஆண் பெண் பாரபட்சம் இல்லை. (3:195, 4:124, 16:97, 40:40)

இறந்தவர் விட்டு செல்லும் சொத்தில் பெண்ணுக்கும் பங்கு உண்டு. (4:7)

தொடரும்...